**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு – முழுமையான தொடர் மதிப்பீட்டுடன் கூடிய முப்பருவ பாடத்திட்டத்தினை செயல்படுத்துதல் – பருவத்திற்கு ஏற்ப பாடநூல்களைப் பிரித்து அச்சிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (க்யு) துறை**

**அரசாணை (நிலை) எண்.204** நாள்: 12.12.2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

கார்த்திகை 26

படிக்கப்பட்டவை:–

1. 110–வது விதியின் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.08.2011.
2. அரசாணை (நிலை) எண்.143, பள்ளிக்கல்வி(வி) துறை, நாள் 19.09.2011.
3. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கக கடித எண். 4914/ஈ2/2011, நாள் 22.11.2011.

–––––

**ஆணை :–**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 110வது விதியின் கீழ் 26.08.2011 அன்று கீழ்க்கண்டவாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:–

''குழந்தைப் பருவத்தில் தேவைக்கு அதிகமாக புத்தகச்சுமையைத் தூக்குவதால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன், வரும் கல்வியாண்டு முதல் இப்புத்தகச் சுமையைக் குறைக்கும் வகையில் தமிழ்நாட்டில் முப்பருவ முறை, அதாவது Trimester pattern அறிமுகப்படுத்தப்படும். முழுக் கல்வியாண்டிற்குரிய பாடப்புத்தகங்கள் மூன்று பருவங்களுக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பருவ முடிவிலும் தொடர் மற்றும் கூட்டு மதிப்பீட்டுடன் கூடிய தேர்வுகள் நடத்தப்படும். இதன்மூலம் மாணவர்களின் கவலை, அச்சம், மன அழுத்தம் ஆகியவை பெரிதும் குறைக்கப்படுவதுடன் பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் புத்தகச் சுமையினால் ஏற்படும் இன்னல்கள் நீக்கப்படும்''

2. மேற்காணும் அறிவிப்பின்படி, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், முழுமையான தொடர் மதிப்பீட்டுமுறை (Continuous and Comprehensive Evaluation)யினைச் செயல்படுத்துவது குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், வரும் கல்வியாண்டில் (2012–2013) பாடநூல்களை மூன்றாகப் பிரித்து ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ப பாடநூல்கள் வெளியிடுவது தொடர்பாகக் கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்.

(i). பாடநூல்களை மூன்றாகப் பிரிக்க ஒன்று முதல் எட்டு வகுப்புகளுக்கு நடைமுறையில் உள்ள பாடநூல் பக்கங்களைக் கொண்டு கணக்கிடும்போது கீழ்க்கண்டவாறு பாடநூல்களைப் பிரிக்கலாம்.

| நடைமுறையில் உள்ளவை | | | | மாற்றியமைக்கப்பட வேண்டியவை | |
|---|---|---|---|---|---|
| வ. எண். | வகுப்பு | பாடப் புத்தகங்களின் எண்ணிக்கை | பாடப் புத்தகங்களின் மொத்த பக்க எண்ணிக்கை | ஒருங்கிணைக்கப் பட்ட பாடநூல்கள் (ஒவ்வொரு பருவத்திற்கும்) | ஒருங்கிணைக்கப்பட்ட பாடநூலின் பக்கங்கள் தோராயமாக (முழுமையான தொடர் மதிப்பீடு இணைப்புடன்) ஒவ்வொரு பருவத்திற்கும்) |
| 1. | I | 4 | 368 | 1 | 138 |
| 2. | II | 4 | 432 | 1 | 154 |
| 3. | III | 5 | 640 | 1 | 228 |
| 4. | IV | 5 | 632 | 1 | 225 |
| 5. | V | 5 | 680 | 1 | 243 |
| 6. | VI | 5 | 608 | 1 | 243 |
| 7. | VII | 5 | 1024 | 2 | 190 |
| 8. | VIII | 5 | 1152 | 2 | 220 |

(ii). இவ்வாறு பாடநூல்களை ஒன்று, முதல் ஆறு வகுப்புகளுக்கு ஒரு பருவத்திற்கு ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட பாடப்புத்தகம் வீதம் மூன்று பருவங்களுக்கும் மாணவர்களுக்கு வழங்கலாம்.

(iii). ஒன்று, இரண்டு வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம், கணக்கு, சூழ்நிலையியல் ஆகிய நான்கு பாடங்களும் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும். மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறு வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் ஆகிய ஐந்து பாடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும்.

(iv). ஏழு மற்றும் எட்டு வகுப்புகளில் தமிழ், ஆங்கிலத்தை தொகுதி–I எனவும், கணக்கு, அறிவியல், சமூக அறிவியலைத் தொகுதி–II எனவும் ஒரு பருவத்திற்கு இரண்டு புத்தகங்களாக வெளியிடலாம்.

(v). தமிழ்வழி (Tamil Medium), ஆங்கில வழி (English Medium) ஆகிய இரண்டு வழிகளுக்கும் மற்றும் சிறுபான்மை மொழிகளுக்கும் இவ்வாறே மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றலாம்.

(vi). சிறுபான்மை மொழிப்படங்களில் தமிழ், ஆங்கிலம் தவிர பிற பாடங்கள் அந்தந்த மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு சேர்த்து அளிக்கலாம்.

(vii). சிறுபான்மை மொழி மாணவர்களுக்கு அந்தந்த மொழி சார்ந்த மொழிப்பாடநூல் (Reader) தனியாக வழங்கலாம். அதை மூன்றாகப் பிரிக்காமல், ஆண்டிற்கு ஒரு புத்தகமாக தற்போது நடைமுறையில் உள்ளதைப் போலவே வழங்கலாம்.

(viii). பாடப்புத்தகங்களை A4 அளவில் அச்சிடுவதன் மூலம் பாடவாரியாக ஒருங்கிணைப்பது எளிதாக அமையும்.

(ix). ஒன்பது, பத்து வகுப்புகளுக்கு முப்பருவமுறை 2012–2013ஆம் கல்வியாண்டில் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பதால் பழைய முறையினைப் பின்பற்றி பாடநூல்களை அச்சிட்டு வழங்கலாம்.

4. மேலே பத்தி 3–ல் உள்ள ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கலாம் எனக் கருதி, அவ்வாறே மேலே பத்தி 3ல் இனம் (i) முதல் (ix) வரை தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துருவினை ஏற்று ஆணையிடுகிறது. மேலும், முழுமையான தொடர் மதிப்பீட்டுடன் (Continuous and Comprehensive Evaluation) கூடிய முப்பருவ பாடத்திட்டத்தை (Trimester System) செயல்படுத்திடவும், அதற்கேற்ப பருவத்திற்கு ஏற்ப பாடநூல்களைப் பிரித்து அச்சிடவும் தமிழ்நாடு பாடநூல் கழகத்திற்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,
அரசு கூடுதல் தலைமை செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி இயக்ககம்,சென்னை–6.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் கழகம்,
சென்னை–6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை–6.
கூடுதல் திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் இடைநிலைக் கல்வி,
சென்னை–6.
தலைவர்,
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
இயக்குநர்,
பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்,
சென்னை–6.
அரசு தேர்வுகள் இயக்குநர்,சென்னை–6.

<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம்,
சென்னை–9
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை
அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமை செயலாளரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வித் (வி)துறை சென்னை – 9.

ஆணைப்படி அனுப்பப்படுகிறது//
பிரிவு அலுவலர்